தனித்தமிழ் சிறுவர் கலை இதழ்

# தமிழ்ச்சிட்டு



## உள்ளத் தூய்மை!

நாளும் நாளும் குளிக்கிறோம்;
நாளும் நாளும் அழுக்கெலாம்
மேலும் மேலும் சேர்ந்ததே!
மீண்டும் மீண்டும் குளிக்கிறோம்!

உடலில் சேரும் அழுக்குப்போல்
உணவில் சேரும் அழுக்கெலாம்
குடலில் சேர, மருந்தினைக்
குடித்து நீக்கி விடுகிறோம்!

இவ்வா றகத் தூய்மையாய்
இருத்தல் வேண்டும் என்றுமே!
அவ்வா றக நெஞ்சிலும்
அழுக்கைப் போக்கல் நல்லதே!

பொய்யும், திருட்டும், ஒருவன்மேல்
பொறாமை கொள்ளும் அழுக்கெலாம்
வைத்திருக்கும் உள்ளத்தை
வந்து சேரும் தீமையே!

குரல்: 3.
இசை: 8.



விலை
20 காசு

# திருக்குறள்

பெரிய வர்க்குப் பெரியநூல்!
சிறிய வர்க்கோர் அரியநூல்!
உரிய வர்க்கும் உரிய நூல்!
உலகில் யார்க்கும் உயர்ந்த நூல்!

அன்பைப் பற்றிச் சொல்லுமே!
அறத்தை விளக்கிக் கூறுமே!
பண்பை எடுத்துக் காட்டுமே!
பணிவை உயர்வை ஊட்டுமே!

உலகில் யார்க்கும் ஒரு குரல்!
உண்மை பேசும் திருக்குறள்!
பலவும் அறிந்து கொள்ளலாம்!
படித்து மடமை தள்ளலாம்!

---

# மழை

பிழைக்கும் உயிர்கள் மகிழவும்,
பூண்டு புற்கள் துளிர்க்கவும்,
அழைக்கின் றேனே உன்னையே
அருள் மழையே ஓடிவா!

வறண்ட ஏரி ஆறெல்லாம்
வழிய, வானி லிருந்துகீழ்
இறங்கி வந்து தேங்கிட
இன்ப மழையே ஓடிவா!

பயிர் விளைந்து குவியவும்,
பாரில் ஒழுங்கு நிலைக்கவும்,
உயிர்கள் தோன்றி வாழவும்
உதவும் மழையே ஓடிவா!

மழையே மழையே ஓடிவா!
மக்கள் இன்பம் நாடிவா!
உழைக்கும் உழவர்க் குதவவா!
உலகம் செழிக்க ஓடிவா!

---

பாடல்கள்: துரை-மாணிக்கம்.

# தமிழ்ச்சிட்டு

## தனித்தமிழ் சிறுவர் கலைஇதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-3 | தி.பி.-உ௦௦௦ (மீனம்) மார்ச்சு, ஏப்பிரல்--69 | இசை-8.

# குல சமயங்கள்!

தம்பி! சென்ற இரண்டு இதழ்களிலும் எதிர்காலத்தைப் பற்றியும், அந்த எதிர்காலத்தைச் சிறந்ததாகவும் இன்பமானதாகவும் உருவாக்க வேண்டுமானால் நீ நடந்துகொள்ள வேண்டிய முறைகள் பற்றியும் ஒருவாறு தெளிவாகச் சொன்னேன். இந்த இதழில் நாம் தவிர்க்க வேண்டிய சில பூசல்களைப் பற்றிக் கூறுவேன்.

தம்பி! மாந்தர்களாகிய நாம் விலங்குகள், பறவைகள், பிற சிற்றுயிர்கள் போல் அன்றி, உயர்ந்த அறிவுணர்வும் எண்ணுதிறனும் செயல் திறனும் வாய்ந்தவர்கள் இல்லையா? எனவே நாம் எல்லாரும் ஒரே இனம், ஒரே வாழ்க்கை உடையவர்கள் என்று சொல்லிக்கொள்வதில் தவறில்லை அன்றோ? ஆனால், தம்பி, நாம் எல்லாரும் ஒன்று என்று ஒப்புக் கொள்கின்றோமா? நான் வேறுசாதி; நீ வேறுசாதி; அவன் வேறு சாதி என்று நம்மில் நாமே ஆயிரக்கணக்கான சாதி

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்,
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

குலங்களாகப் பிரித்துக் கொண்டுள்ளோம். உன்னுடன் படிக்கும் பள்ளிப் பிள்ளைகளைக் கேட்டுப்பார். சிலர் தங்களைப் பிராமணர் என்று பெருமையுடன் கூறிக்கொள்வர்; சிலர் தங்களைச் செட்டியார், முதலியார், பிள்ளைமார், பள்ளர், பறையர் என்று இன்னும் நூற்றுக்கணக்கான சாதிப் பெயர்களைக் கூறுவார்கள். அவர்கள் அத்துடன் நில்லாது இவன் இன்னவனைவிட உயர்த்தி; இவன் இவன் தாழ்த்தி; இவன் வீட்டில் நாங்கள் தண்ணீரும் அருந்தமாட்டோம்; இவன் வீட்டுப் பக்கமே நாங்கள் போகமாட்டோம்;—என்று பலவாருக இழிவாகவும் பழிப்பாகவும் பேசிக் கொள்ளுவர்.

இவ்வகையான சாதிகளும் இழிவு தாழ்வுகளும் இவர்களில் மட்டுமன்றி இவர்கள் வழிபடுகின்ற தெய்வங்களிலும் வேற்றுமைகளையும் உயர்வு தாழ்வுகளையும் கற்பித்திருக்கின்றன தெரியுமா? சாதியின் பெயரால் அல்லது குலத்தின் பெயரால் மக்கள் பிரிக்கப்படுகின்ற அதே நேரத்தில் சமயத்தின் அல்லது மதத்தின் பெயராலும் மக்கள் பலவாறு பிரிக்கப்பட்டுள்ளனர். ஒருவன் சைவன் என்று தன்னைப் பெருமைபாகக் கூறிக்கொள்ளுகின்ருன். இன்னொருவன் வைணவன் என்கின்ருன். இப்படிச் சமணன் என்றும், புத்தன் என்றும், இசுலாமியன் என்றும், கிறித்துவன் என்றும் பலவாருகத் தம்மைக் கூறிக் கொள்கின்றனர் மக்கள்.

தம்பி! இவர்கள் இத்துடன் நிற்கவில்லை. இவர்கள் சார்ந்த சாதிகளையும் மதங்களையும் வெளிப்படையாகக் காட்டி அவ்வவற்றிற்கான குறியீடுகளையும், பூச்சுகளையும் தங்கள் உடல்களில் அணிந்து கொள்கின்றனர். பிராமணன், தான் எல்லா மக்களினும் மிகவும் உயர்ந்தவன் என்று கூறிக்கொண்டு அதற்குத் தகுந்தாற்போல் ஒரு பூணூலையும் தன் உடலில் மாட்டிக் கொள்கின்ருன். உன்னுடன் படிக்கும் பிராமணத் தம்பியை நீ அழைத்து, "தம்பி, உன் உடலில் பூணூல் அணிந்திருக்கின்ருயா?" என்று கேள். "ஆமாம்" என்பான். அஃது எதற்கு என்று கேள். "நாங்களெல்லாரும் பிராமணர்கள்; உங்கள் எல்லாரையும்விட சாதியிலே உயர்ந்தவர்கள்" என்பான். இன்னும் சைவனுக இருந்தால் பூணூலுடன் நெற்றி நிறைய நீறும், வைணவனுக இருந்தால் பட்டையான நாமமும் தீட்டியிருப்பான்.

தம்பி! இந்தச் சாதியமைப்புகளும் சமய அமைப்புகளும் போலியாகவும், பூசலுக்காகவும் ஏற்பட்டவை. மக்கள் அறியாமையால் தங்கள் தங்களுக்குள் உணவுக்காகவும், உடைக்காகவும், உறையுளுக்காக

வும் போரிட்டுக் கொண்டிருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பழக்க வழக்கங்கள்; மூட நம்பிக்கைகள். இவை இவ்விருபதாம் நூற்றாண்டின் எல்லைவரையிலும் கூட நம்மை விட்டுப் போன பாடில்லை. நாம் இறந்துபோன பின்னர்கூட இச்சாதிகளும் சமயங்களும் நமக்கு அடையாளங்களாக நின்று நம்மைத் தாழ்த்திக் கொண்டும் உயர்த்திக் கொண்டும் உள்ளன.

அன்புள்ள தம்பி! இறைவன் பொதுவானவன். அவன் இன்ன வடிவினன், இன்ன நிறத்தினன் என்றுகூட நம்மால் அறிய முடியாது. உணர்வு வடிவாக இவ்வுலகங்கள் எல்லாவற்றிலும் காற்றுப் போல், ஒளியைப்போல் அளாவி நிற்கும் இவ் விறைப் பேராற்றலை நாம் வணங்கினாலும் அல்லது வணங்காமல் நின்றாலும் ஒன்றுதான். எல்லா அறிவும் தானேயாக நிற்கும் அவ் விறையாற்றலுக்கு நம் அறிவும் ஒன்றுதான்; அறியாமையும் ஒன்றுதான். விருப்பு வெறுப்பற்ற அப்பேருண்மைக்கு நம் விருப்பமும் ஒன்றுதான்; வெறுப்பும் ஒன்றுதான். எனவே தம்பி, நீ நெற்றி நிறைய நீறுபூசிக் கொள்வதும், நாமம் தீட்டிக்கொள்வதும் அவற்றுக்குள் பூசல்களையும் ஏற்றத் தாழ்வுகளையும் கற்பித்துக் கொள்வதும் உன் அறியாமையே தவிர வேறு இல்லை. நீ செய்கின்ற அறியாமைக்கும் பூசல்களுக்கும் இறைவனைக் காரணங் காட்டாதே! நம் சாதிப் பூசல்கள் நம் இனத்தை அழிப்பன. நம் சமயப் பூசல்கள் நம் அறிவைத் தடுப்பன. நம்மைத் தாழ்த்திக் கொண்டிருக்கும் குல சமயப் பூசல்கள் ஒழியும் வரை தம்பி, நாம் முன்னேறி விட்டோம் என்று சொல்ல முடியாது. மனத்தில் அழுக்குகளையும் அறிவில் இருளையும் வைத்துக்கொண்டு உடலில் குலக்குறிகளையும், சமயக் குறிகளையும் இட்டுக்கொள்வது மிகவும் அருவருப்பாகும்.

தம்பி, நாம் எல்லாரும் ஒரே இனம் என்று எண்ணு! சாதிப் பிரிவை வெளிப்படுத்தும்குறிகளை விலக்கு. சமயப்பிரிவைப் பறைசாற்றும் குறிகளை அகற்று. அகமும் புறமும் தூய்மையாக இருக்கட்டும். நம்மில் எவ்வகையிலும் இழிவு தாழ்வுகளைக் கற்பித்துக் கொண்டிருக்கும் தீய கொடும் பழக்கம் தவிர்க்கப்பட வேண்டிய இழிவுகளுள் முதலாவதாகும். அதனை உடனே களைந்தெறி!

பெருஞ்சித்திரன்.

# முத்துமொழிகள்

"பொன் எத்தனை மாற்று என்று அறிய உரைகல் இருக்கிறது. மாந்தன் எத்தனை மாற்று என்று அறியப் பொன் இருக்கிறது."

—சைலோ.

"பொதுமக்களின் கருத்தைக் கண்டு கோழைகள் நடுங்குகிறார்கள். முட்டாள்கள் அதனுடன் மோதுகிறார்கள். அறிவாளிகள் அதனை எடை போடுகிறார்கள். திறமை மிகுந்தோரோ அதனை உருவாக்குகிறார்கள்."

—உரோலந்து.

"தொலைவில்தான் இன்பம் இருக்கிறது என்று எண்ணி ஏங்குகிறான் முட்டாள். தன் காலடியிலே அது கொட்டிக் கிடப்பதைக் காண்கின்றான் அறிவாளி."

—சேம்சு ஆபன் கீம்.

"தற்பெருமைக்காரன் கடவுளை இழக்கிறான். பொறாமைக்காரன் நண்பனை இழக்கிறான். சினமுள்ளவனோ தன்னையே இழந்து விடுகிறான்."

—கால் பாதிரியார்.

"ஒழுக்கம் என்பது போர்க்களம் போன்றது. அதில் வாழவேண்டும் என்றால் ஓயாமல் மனத்தோடு நாம் போராடத்தான் வேண்டும்."

—உருசோ.

"நூலறிவு வந்து விடுகிறது. மெய்யறிவு வரத் தயங்குகிறது."

—தென்னிசன்.

"மாந்தனுக்குள்ள இழிவு குமுகாயத்துக்குள்ள இழிவாகும். குமுகாயத்துக்குள்ள இழிவு நாட்டுக்குள்ள இழிவாகும். இந்த இழிவு நீங்கவில்லையானால், நமக்கு முன்னேற்றமில்லை; கண்டிப்பாய் எந்தத் தன்னுரிமையுமில்லை."

—ஈ. வெ. இரா.

"இன்ப வாழ்வு விடுதலையின் பயன். விடுதலை அச்சமில்லா நெஞ்சின் பயன்."

—பெரிக்கிளீசு.

"சோம்பேறித் தனத்தில் எப்பொழுதும் ஏக்கம் குடிகொண்டிருக்கிறது."

—கார்லைல்.

---

தொகுப்பு: கதிரொளி, சேரன்மாதேவி.

# தெரிந்து கொள்ளுங்கள்

() எரிமலைப் பாறையின் மீது படிந்திருக்கும் உப்பே இந்துப்பு எனப்படுகிறது.

() அணுவைப் பிளப்பதற்குப் பயன்படும் "புரோமிதியம்" என்ற பொருளின் விலை (ஏழு ஆண்டுகட்குமுன்) ஓரவுன்சு அறுபது இலக்கம் உருபாக்களாகும். (இப்போது இப்பொருளின் விலை இன்னும் சற்று மிகுந்திருக்கலாம்.)

() ஐரோப்பாவிலுள்ள சாக்கடலின் நீர்ப்பரப்பின்மேல் மல்லாந்து படுத்துக்கொண்டு புத்தகம்படிக்கலாம். நிறைந்த உப்புக்காரணமாக அக்கடல்நீரின் அடர்த்தி மிகுதியாக விருப்பதால் இவ்வாறு செய்ய வியலும்.

() அணுஆய்வுக்குப் பயன்படும் ஒருவகை நீரின்விலை ஒரு "பைண்ட்" நாற்பதாயிரம் உருபாக்களாகும். பொதுவான நீருக்கும், இவ்வகை நீருக்கும் பார்வையில் எந்தவகை வேறுபாடும் தெரியாது.

() பறவையினுடைய இறகின் அளவு, எடை ஆகியவற்றைப் பார்க்கும்பொழுது இயற்கையிலேயே மிகுதியான உறுதியுடைய மிகுந்த எடையற்ற மெல்லிய பொருள் அதுவே.

—தொகுப்பு: சு. ச. மாறன், சேரன்மாதேவி.

---

1. ஐபீரியாவின் தீபகற்பமும் பால்கன் தீபகற்பமும் "ஐரோப்பாவின் பழத்தோட்டம்" எனப்படும்.
2. உலகில்எழில்மிகுந்த துறைமுகத்தையுடையது சான்பிரான் சிசுகோ நகரம்.
3. முதன் முதலில் அமேசான் காடுகளில்தான் இழுவை (இரப்பர்) காணப்பட்டது.
4. டிராலர் என்பது மீன்பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு பெரிய நீராவிக்கப்பல்.
5. உலகிலேயே கூட்டுறவு முறையில் சிறந்து விளங்கும் நாடு 'டென்மார்க்கு' ஆகும்.

—தொகுத்தவர்: அ. மா. விசயகுமார், புதுவை-1.

# உலகில் மிகப்பெரியவை......!

தொகுப்பு: சு. ச. மாறன், சேரன்மாதேவி.

உலகின் மிகப்பெரும் பல்கலைக்கழகம்: இங்கிலாந்து நாட்டில் உள்ள ஆக்சுபோர்டு பல்கலைக்கழகமாகும். (Oxford University).

மிகப்பெரிய நாடு: உருசியா.

மிகப்பெரிய நூலகம்: இலெனின் நினைவு நூலகம் (உருசியா)

மிகப்பெரிய கடிகாரம்: இலண்டன் நாடாளுமன்றக் கட்டிடத்தின் மேற்கோபுரத்தில் வைக்கப்பட்டுள்ள "பிக்பென்" (இதன் முகப்பு–23'; நிமையமுள்: 14' நீளம்; மணிகாட்டும் முள்: 9' நீளம்)

மிகப்பெரிய கண்காட்சிச்சாலை: இலண்டன் மாநகரில் உள்ள "பிரிட்டிசுக் கண்காட்சிச்சாலை." (British Museum)

மிகப்பெரிய கப்பல்: 83673 கல்லெடையுள்ள "அரசி எலிசபெத்து"

மிகப்பெரிய அரண்மனை: வத்திகான் அரண்மனை (உரோம்)

மிகப்பெரிய உப்புநீர்க்குளம்: "காசுபியன் (Caspian) குளம்"

மிகப்பெரிய காழக(வைர)ச் சுரங்கம்: கிம்பர்லி (தென்னாப்பிரிக்கா)

மிகப்பெரிய கிறித்தவ(அன்னை)க்கோயில்: உரோம் நகரிலுள்ள தூய பீட்டர்சு கோயில் (Saint Peter's Church)

மிகப்பெரிய வைப்பகம்: அமெரிக்க வைப்பகம். (Bank of America)

மிகப்பெரிய படை: உருசியாவின் செம்படை (Red army in U. S. S R.)

---

## கழுதை அழுத கதை

ஆசிரியர் வெளியூர்ச்செலவு காரணமாகவும் மற்றும்பல தவிர்க்க முடியாத இடர்ப்பாடுகளாலும் இம்மாத இதழில் கழுதை அழுத கதை என்ற உருவகக் கதை வெளியிட இயலவில்லை. அடுத்த மாதம் தொடரும் என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அமைச்சர்,
"தமிழ்ச்சிட்டு"



# குட்டிக்கதை

புலவர். பசும்பொற்கிழார்.

(கண்ணனும் பொன்னனும் உரையாடுகின்றனர்)

கண்: பொன்னு! அங்கே என்ன கூட்டம்?

பொன்: அதுவா...பூ...அது தெரியாதா உனக்கு? நம் பள்ளியில் படிக்கிருனே வால்மீகி!

கண்: ஆமாம் பலமுறை திருடித் திரிபவன். இங்கேயும் திருடிவிட்டான?

பொன்: இங்கே அன்று அதோ...அந்தப் பழத்தோட்டத்தில் பெரிய பலாப்பழத்தைத் திருடப் போனுர்கள்!

கண்: போனுர்கள் என்ருல் இன்னொருவன் யாரோ?

பொன்: அவனே நேற்றுவரை நல்லவனுகத்தானிருந்தான். நிலத்து இயல்பால் நீர் திரிவதுபோல, (அவன்)...கம்பன், அவனும் இவனும் சேர்ந்துபோய் மரத்தில் ஏறினுர்கள். கம்பனுக்கு மரம் ஏறிப் பழக்கம் இல்லாததால் ஏற முயன்ருன். வால்மீகியோ மர உச்சிக்குப் போய், பழத்தை வெட்டத் தொடங்கினுன்!

கண்: தோட்டக்காரன் இருப்பானே?

பொன்: அவன் சுருட்டு வாங்கப் போய் விட்டான். கம்பன் மரத்தில் ஏறும் பொழுதே. அங்கே உள்ள தேன் கூட்டைப் பார்த்து விட்டான். உடனே வால்மீகியிடம் ''டேய் வால்மீகி! பலாப் பழத்தை எடுத்து இந்தத் தேனில் தோய்த்துத் தின்ருல் எப்படியிருக்கும்! (வாயைச் சப்புக்கொட்டி) நீபழத்தை எடு; நான் தேனை எடுக்கிறேன்'' என்று சொல்லி, ஒரு குச்சியால் தேன் தட்டைக் குத்தி விட்டான். அவ்வளவுதான்! தேனீக்களுக்குச் சினம் பொங்கி, கம்பனையும் வால்மீகியையும் கதறக் கதறக் கொட்டின உச்சியில் உள்ளவன் ஓங்கியமுகி

ருன். பாதி மரத்தில் உள்ளவன் பதறிப் பதறி அழுகிருன். இவ்வேளையில் மலைப் பாம்பு ஒன்று தரையிலிருந்து மரத்தில் ஏறுவதைப் பார்த்துவிட்டான் கம்பன்.

கண்: ஓரே அலறலாக இருக்குமே! அப்புறம்?

பொன்: அதே வேளையில் தோட்டக்காரனும் வந்து விட்டான். உச்சி மரத்து வால்மீகி பார்த்துவிட்டான். கேட்க வேண்டுமா அழுகையை! ஓரே கதறல்!

தோட்டக்காரன், பாம்பைப் பார்த்ததும் ஓடோடிப்போய் பழம்தின்னிப் பறவைகளைச் சுடும் சுடுகுழாயால் சுட்டான். பாம்பும் விழுந்தது, பையன்களும் விழுந்தனர் அதிர்ச்சியால்.

கண்: அப்படியா! அவர்கள் கீழே விழுந்ததால் உறுப்புப் பழுதேற்பட்டிருக்குமே!

பொன்: ஏற்படாமலாவிருக்கும்! கம்பனும் வால்மீகியும் நடமாடுவதே அரிது! அந்த அளவிற்கு அவர்கள் கால் முறிவு ஏற்பட்டு எலும்பு முறிவு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப் பேசிக்கொண்டிருக்கிருர்கள். பேராவல், பெருங்கேட்டில் கொண்டுபோய் விட்டது.

கண்: "உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேம் எனல்" என்ற திருக்குறள் பாட்டைக்கூட அவர்கள் நம் வகுப்பில் கேட்டிருக்கிருர்கள். அப்படி இருந்தும் பயனற்றவராயினர்.

பொன்: ஆம். கசடு அறக் கற்றல்தானே! வா செல்வோம். இது நமக்கும் ஒரு பாடம். ○

---

## "நஞ்சும் பிணி தீர்க்கும்"

உருசியாவில் பாம்புகளிலிருந்து எடுக்கப்படும் நஞ்சு மருத்துவத் துறையில் பெரிதும் பயன்படுகிறது. ஏறத்தாழ 150 சீரெடை நஞ்சு தேவையானல் குறைந்த அளவு இருபதாயிரம் பாம்புகள் தேவைப்படுகின்றனவாம்.

# அறிஞர் அம்பேத்கார்.

'வில்வம்'

அன்புத் தம்பி தங்கைகளே!

"சாதி" குலச்சமய வேறுபாடுகளால், மாந்தருள் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற கொடுமையில் சிக்கி, குமுகாயத்தில் தீண்டப்படா தோர், தாழ்த்தப்பட்டோர் என வாழ்ந்து வரும் மக்களின் துயர் துடைக்கத் தோன்றியவரே அறிஞர் அம்பேத்கார். வளரும் பயிர்க ளான உங்களுக்கு அந்தக் குமுகாயப் புரட்சியாளரின் வரலாறு தெரிந்தால், வருங்காலக் குமுகாயமாவது செம்மை பெறும் என்றே இதைக்கூறுகிறேன்.

அறிஞர் அம்பேத்கார் 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் நாள் அன்று மராட்டிய மாநிலத்தில் தாழ்த்தப்பட்டோர் குடும்பத்தில் பிறந்தார். அவர் பிறந்த காலம் தீண்டாமைத்தீ நாடெங்கும் பரவி யிருந்தகாலம்; தாழ்த்தப்பட்ட மக்கள் கோவில் பக்கமே நெருங்க முடியாத காலம்; குடிக்க, ஊர்க்குளத்தில் தண்ணீர் எடுக்க முடியாத காலம்; தாழ்த்தப்பட்ட சிறுவனு? பள்ளியில் இடமில்லை என விரட்டிய காலம்; பார்ப்பனர்களின் ஆணவத்திமிர் தலைநிமிர்ந்த காலம்.

உங்களைப் போலவே அம்பேத்காரும் பள்ளிக்குச் சென்று கல்வி கற்பதை விரும்பிய அவர் தந்தை பள்ளிக்கு அழைத்துச் சென்றார். பல பள்ளிகளில், அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் இடம்தர மறுத்தனர். இறுதியில் ஒரு பள்ளியில் இடம் கொடுத்தனர். இடம் என்றால் எங்குத் தெரியுமா? எல்லா மாண வர்களும் அமரும் இடத்தில் அன்று; வகுப்பறையில் ஒரு மூலையில் தனியிடம்! அங்கு ஆசிரியர்கூட நெருங்கமாட்டார். அவர் கையில் உள்ள பிரம்புகூட அம்பேத்காரைத் தீண்டுவது தீது! பள்ளியில் உள்ள தண்ணீர்க் குடத்தில் தண்ணீர் குடிக்கக் கூடாது! விளையாட் டிலும், மற்ற மாணவர்களோடு சேர்ந்து விளையாடத் தடை!

உங்களில் ஒருவருக்கு இக் கொடுமை நிலை ஏற்பட்டு இருப்பின், கல்வி கற்பதையே விட்டொழித்திருப்பீர்கள்! ஆனால், அம்பேத்கார் அவ்விளமைப் பருவத்திலேயே அத்துணைக் கொடுமைகளையும் பொறுத்துக்கொண்டு, தம் திறமையால் கல்வியின் கரையினையே கண்டார். அக்காலத்தில் தாழ்குலத்தோர், 'சமசுகிருத' மொழியைக் கற்கக்கூடாது என்று தடுத்தனர். அதை எதிர்த்து, எவர் துணையு

மின்றித்தாமே பயின்று, அம்மொழியின் தகுதியின்மையை உலகுக்கு வெளிப்படுத்தினர். தாழ்ந்த மக்களை உயர்ந்தவர்களாக்கி நம் நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தினர்.

இருபதாம் அகவையில் கலையிளைஞர் (B.A) பட்டம் பெற்று பரோடா (Baroda) மன்னரின் உதவிப் பணத்தால் மேற்படிப்புக்காக அமெரிக்கா சென்றார். அங்கு, கொலம்பியா பல்கலைக்கழகத்தில் 1915-இல் M. Sc , பட்டமும், 1917-இல் Ph. D. பட்டமும், பின்பு இலண்டனில் 1923-இல் 'உருபாவைப் பற்றிய சிக்கல்' (The Problem of the Rupee) எனும் பொருளாதாரக்கட்டுரைக்காக, பண்டாரகர் (டாக்டர்) பட்டமும், அதே ஆண்டில் 'பாரிசுடர்' (Barrister) பட்டமும், மற்றும் செர்மனி போன்ற வெளிநாடுகளில் எண்ணற்ற சிறப்புப் பட்டங்களும் பெற்றுத் தாய்நாடு திரும்பினர்.

தாய்நாட்டில், அவருடைய உயர்ந்த அறிவுத்திறனைப் புகழாமல் போனாலும் மதிக்கக்கூட ஒருவரும் இல்லை! மீண்டும், தீண்டப்படாதவன்; தாழ்த்தப்பட்டவன் என்று, அவர் தகுதிக்கு ஏற்ற வேலை கொடுக்க மறுத்தனர். இனியும் இந்தச் "சாதி" குலச்சமயக் கொடுமையைப் பொறுக்க முடியாது என்ற முடிவுடன் தம் வாழ்வையே அதன் எதிர்ப்புக்கு இரையாக்கினர். "சாதி'ப் பெயரால் இந்நாட்டில் நடக்கும் தீமைகளைத் தீயிட்டுக் கொளுத்துவேன்" என்று பெருமுழக்கம் செய்தார். அதன் பயனாக இந்த "சாதி" வேறுபாட்டிற்கே அடிப்படையான 'மனுநீதி' என்ற இழிநூலை 1927-இல் மாபெரும் பொதுக்கூட்டத்தில் தீயிட்டுக்கொளுத்தினர். இந்த நிகழ்ச்சி பழமைவிரும்பிகளைப் பதைபதைக்கச் செய்தது. "சாதி"க் காவலர்கள் பொறிபறக்கும் கண்களோடு நோக்கினர். என்றாலும் அம்பேத்கார் அஞ்சவில்லை.

எந்தக் குலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று கட்டுப்பாடு இடப்பட்டிருந்ததோ, அதே குளத்தில் அவர்களைத் தண்ணீர் எடுக்கச் செய்தார். எந்த மக்களைக் கோவில் அருகில்கூட நெருங்கக் கூடாது என்று தடுத்தார்களோ, அந்த மக்களைக் கோவிலுக்குள்ளேயே நுழையச் செய்தார்! "மக்களுக்காகச் சமயமா? சமயத்திற்காக மக்களா"? என்று அவர் வீசிய வினா, சமயத்தின் பெயரால் வயிறு வளர்த்தவர்களுக்குப் பேரிடியாக வீழ்ந்தது! இப்படியாகச் "சாதி" குலச்சமய வேறுபாட்டைத் தகர்த்து எதிர் நீச்சல் போட்டார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் குரலாக 'பகிசுகிரித் பாரத்' (Bahishkrit Bharat) "சனதா" (Janatha) போன்ற வாரத்தாளிகைகளை நடத்தினர். எத்தனையோ நூல்களைப்படைத்தார். "தாழ்த்தப்பட்டோர்கழகம்" (Scheduled Caste Federation) அமைத்தார். 1936-இல் 'மக்கள் கல்விக் கழகம்' (People's Education Society) துவங்கினர். இக் கழகத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உயர் கல்வி பெற, பல உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஏற்படுத்தினர் மற்றும் 'தனியுரிமைத் தொழிலாளர் கட்சி' (Independent Labour Party) அமைத்து எல்லாத் தொழிலாளர்களின் தனியுரிமைக்கும் பாடுபட்டார்.

இந்தியாவின் முதல் அமைச்சரவையில் சட்ட அமைச்சராக இருந்து, இந்நாட்டிற்கு அரசியல் சட்டத்தை உருவாக்கித் தந்தார். சட்டப் பேரறிஞர் அம்பேத்கார் தான் முதன் முதலில், 'இந்தி இந் நாட்டிற்கு ஆட்சிமொழியாக இருக்கச் சிறிதும் தகுதியற்றது' என்று நாடாளும் மன்றத்தில் எதிர்ப்புக் குரல் எழுப்பினர்.

தென்னாட்டில் தந்தை பெரியார் அவர்கள் இந்து சமய அழிவுக்கு வித்தூன்றியபோது, அவருக்குத் துணையாக வடக்கே அம்பேத்கார் புரட்சிக்குரல் எழுப்பினர். 'இந்நாட்டில் இந்து சமயத்தை அழித்தால்தான் சாதி குல வேறுபாடுகள் அழியும்" என்று கூறி, இந்து சமயத்தை விட்டு "சாதி" குல வேறுபாடு அற்ற "புத்த சமயத்"தை அடைந்தார். அவரைப் பின்பற்றி எல்லா இந்து மக்களும் அச் சமயத்திற்கு முழுக்குப் போட்டுவிட்டுப் புத்தமதத்தினராக மாறினர். இதனல் தாழ்த்தப்பட்டவர்கள், உயர்ந்தவர்கள் ஆயினர். "சாதி", குலச்சமய வேறுபாட்டிற்குச் சாவுமணி அடிக்கும் வேளையில்தான், அறிவுத் தென்றல், குமுகாயப் புரட்சிக்கனல் அடங்கி விட்டது.

ஆம்; 1956-ஆம் ஆண்டு திசம்பர் 6-ஆம் நாள் பேரறிஞர் அம்பேத்கார் மறைந்து விட்டார்.

அருந்தமிழ்ச் சிட்டுகளே! இன்னும் இந்நாட்டில் "சாதி"க் கொடுமை அடங்கியதாகத் தெரியவில்லை. அறிஞர் அம்பேத்காரைப் போல் நீங்களும் அந்தக் கொடுமையை எதிர்க்கத் துணிவுபெற்றுச் செயலாற்றுதல் கடமையன்றோ?

# ‘அசாமை’ அறிவோம்.

நாற்றமிகு-செம்பியன்.

1. ‘‘அசாம்’’ மாநிலத்தின் மொத்தப்பரப்பு 47,094 ச. கற்கள்.

2· மொத்த மாவட்டங்கள் ‘பதினொன்று’

3. ‘‘அசாமி’’ல் உள்ள கிராமங்களின் எண்ணிக்கை 25,702·

4. நகரங்களின் எண்ணிக்கை 60

5. அங்கு ஓடும் ஆறுகள் 2.

6. மொத்த மக்கள் தொகை 1,18,72,772

7. 1 சதுர கல்லில் 298 மக்கள் வாழ்கின்றனர்.

8. ஓர் ஆண்டின் விளைச்சல் 18.17 இலக்கக் கல்லெடைகள்.

9. ‘‘அசாமில்’’ இரண்டு பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன.

10. அம்மாநிலத்தில் உள்ள கல்லூரிகள் 80

11. மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 3.

12, பொறியியற் கல்லூரிகள் 2.

13. ‘‘அசாம்’’ மாநிலத்தில் 10,000 தொடக்கப்பள்ளிகள் இருக்கின்றன.

14. உயர்நிலைப் பள்ளிகள் 1,000-க்கு மேல் உள்ளன.

15. மொத்த மாணவர்கள் 21 இலக்கம்.

16. அரசினர், தனியார் மருத்துவமனைகளின் எண்ணிக்கை 700.

17. மொத்தப் பாதைகளின் நீளம் 20,000. பதினூற்றுச் சீரடிகள் (கிலோமீட்டர்)

18. நீர்வழிகளின் மொத்த நீளம் 10,000 பதினூற்றுச் சீரடிகள்.

19. ‘‘பொறிப்படகு’’ கள் செல்ல மேலும் 500 பதினூற்றுச் சீரடிகள் நீளமுள்ள நீர்வழி உள்ளது.

20. காடுகளின் பரப்பு 25 இலக்க ‘எக்டேர்கள்’ (Hectares)

21. பயிரிடப்படும் நிலம் 300 இலக்க ‘எக்டேர்கள்’ பரப்பு உடையது.

22. உணவுப் பொருள்கள் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு 200.50 இலக்க ‘‘எக்டேர்கள்’’

# பயன்மொழிகள்.

1. "வாழ்க்கை நிலைகளை நல்ல வகையில் ஒழுங்குபடுத்தி நடத்தும் வல்லமையே கல்வியாகும்." -சான் கிபன்

2. "கல்வியின் தலையாய குறிக்கோள் அறிவு அன்று; நல்ல நடத்தையே." -எர்பர்ட்சு பென்சர்.

3. "எல்லாக் கல்வியின் முடிவும் உண்மையான மாந்தனை உண்டாக்க வேண்டும் என்பதே'. -விவேகானந்தர்.

4. "உன் வாழ்க்கையை நடத்தலாம் என்று நீ படிக்கலாகாது; படிக்கவேண்டும் என்றே நீ உயிர்வாழ வேண்டும்" -இரசுக்கின்

5. கல்வியை மரபுவழி உரிமையாக எவனும் பெற முடியாது; தனது சொந்தப் பயிற்சியினாலேயே ஒருவனிடம் அது வந்து சேருகிறது. -ஓர் அறிஞர்.

6. எண்ணத் தெரியாதவன் முட்டாள். எண்ணக் கூசுபவன் அடிமை. -டிரம்மாண்டு.

7. தகுந்த சமையத்தில் ஊமையாக இருத்தல் பேசுவதைவிடச் சிறந்தது. -டப்பர்.

8. தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை காலால் நடப்பதற்கு மாறாகத் தலையால் நடப்பதை ஒக்கும். -எமர்சன்.

9. உலகிலுள்ள எல்லா ஆற்றல்களாலும் அசைக்க முடியாத ஆற்றல் ஒன்று உளது. அதுவே மாந்தனுடைய மனவாற்றல். -தாலின்.

10. எல்லாவற்றையும்விட நட்பு மனத்தைக் கட்டுப்படுத்துகிறது. நட்பில் நம்பிக்கை கொள்வது மிக மேன்மையான செயலாகும் -இலார்டு ஆர்ரி.

11. நண்பரைத் தேர்ந்தெடுப்பதில் தான் நம்முடைய நல்ல அல்லது கெட்ட பெயரே பொருந்தி இருக்கிறது. -கே.

12. நட்பு உலகம் வெறுங் காட்சி என்பதை நீ காண்பாய். வெறும் வெளித்தோற்றம் அது. விலைமகளுடைய கண்ணீர் போன்றது. அமைச்சனுடைய உறுதி மொழியையும் அல்லது வெறும் நாட்டுப் பற்றாளனுடைய ஊக்கத்தையும் போன்று எல்லாம் இந்தக் காட்சிதோன்றும். ஆனால், எல்லாம் வெறுமையே! -சாவேசு

13. நட்பு என்பது பெயரே யொழிய வேறொன்றுமில்லை. துக்கத்தை உண்டு பண்ணும் மந்திரம். செல்வத்தையோ அல்லது புகழையோ நாடிச் செல்லும் நிழல். ஏழ்மை நிலையிலுள்ளவர்களைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு நீங்கும். -கோல்டுசுமித்.

தொகுப்பு: அரியநகர் "புகழ்"

# எண்-விளையாட்டு.

-பாவை. நடவரசன்.

மாந்தருள் ஆண் என்று சொல்லுகின்றோம்; பெண் என்று சொல்கின்றோம். அதுபோல் எண்களுள்ளும் ஆண் என்றும் உண்டு! பெண் என்றும் உண்டு. உனக்கு அது தெரியுமா தம்பி? தெரியாவிட்டால் இப்பொழுது தெரிந்துகொள்.

எண்களுள் 1, 3, 5, 7, 9 என்பவை ஆணின எண்களாகும். 2, 4, 6, 8 என்பவை பெண்ணின எண்களாகும். 0–என்பது ஆணும் பெண்ணும் அற்ற இனமாகும். அஃதாவது அலியாகும்.

**பெருக்கிப் பார்!**

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 என்பவை அடிப்படை எண்களாகும். அவற்றுள் 8-ஐ நீக்கி 1 2 3 4 5 6 7 9 என எழுதிக்கொள்க. பின்பு 1 முதல் 9 வரை உள்ள எண்களுள் ஏதாவது ஒன்றினை நினைத்து எழுதிக்கொண்டு, அதை ஒன்பதால் பெருக்கவும். பெருக்கிவரும் தொகையால் முன்பு 8-ஐ நீக்கி வைத்திருக்கும் எண்களைப் பெருக்குக. அப்படிப் பெருக்கினல் வரும் விடை முதன் முதலில் நீ நினைத்து எழுதிக்கொண்டாயே ஓர் எண், அந்த எண்ணே ஒன்பதுமுறை வந்திருக்கும்.

**விளக்கம்.**

நினைத்து எழுதிக் கொண்ட எண் = 7

அதை ஒன்பதால் பெருக்கிய தொகை = 63. $(7 \times 9)$

தொகையால் அடிப்படை எண்ணல் பெருக்கக் கிடைக்கும் விடை } = 12345679 × 63 = 777777777

இம்முறையில் மற்ற எண்களையும் (1, 2, 3, 4, 5, 6, 8, 9) நினைத்துப் பெருக்கிப்பார். நினைத்த எண்ணே ஒன்ருவதுநிலை, பத்தாவதுநிலை...போன்ற எல்லா நிலைகளிலும் வந்துநிற்கும்.

**142857.**

1ஐ 7ஆல் வகுக்கவும். வகுத்தால் 0.142857, 142857, 142857 ......என்று தொடர்ந்து சென்றுகொண்டே இருக்கும். அதாவது முதன் முதலில் வந்துள்ள எண்களே (142857) மீண்டும் மீண்டும் வந்துகொண்டே இருக்கும்.

அப்படித் தொடர்ந்துவரும் எண்களை 2, 3, 4, 5, 6–முதலிய எண்களால் தனித்தனியாய்ப் பெருக்கவேண்டும். பெருக்கினுல், முதலில் வந்துள்ள எண்களே முறையாக இடமாறி விடையாக வந்து கொண்டிருக்கும்.

| | |
|---|---|
| 142857 × 2 = 285714<br>142857 × 3 = 428571<br>142857 × 4 = 571428<br>142857 × 5 = 714285<br>142857 × 6 = 857142 | முதலில் வந்துள்ள 6 எண்களும் வரிசையாக இடமாறி வந்திருப்பதைப் பார்க்கவும். |

வலமிருந்து இடம்:

'தேளு மீளுதே'—போன்றவற்றை வலமிருந்து இடமாக எழுதினுல், பொருள் மாறுவதில்லை. கணக்கிலும் அப்படி ஒன்று இருக்கின்றது.

(க) 312 × 221 = 68952. இம்மூன்று எண்களையும் வலமிருந்து இடமாக எழுதுங்கள் வரும் விடையும் சரியாக இருக்கும். 213 × 122 = 25986.

(உ) 836 × 836 = 698896. இவ்விடையை வலமிருந்து எழுதினுல் வருவது அதே விடையாகும் = 698896.

(ங) 1089-ஐ 3-ஆல் பெருக்கி, வரும் விடையை, வலமிருந்து இடமாக எழுதினுல், 7-ஆல் பெருக்கிய விடை கிடைக்கும்; 4-ஆல் பெருக்கி, வரும் விடையை வலமிருந்து இடமாக எழுதினுல், 6-ஆல் பெருக்கிய விடை கிடைக்கும்.

| | |
|---|---|
| 1089X3 = 3267<br>1089X7 = 7623 | 1089X4 = 4356<br>1089X6 = 6534 |

முழு எண்:

மூன்றுநிலை (ஸ்தான) எண்ணை இரண்டுநிலை எண்ணுல் பெருக்கி வரும் விடை நான்கு நிலையில் இருக்கவேண்டும். மேலும், பெருக்கும் எண்ணிலோ, பெருக்கப்படும் எண்ணிலோ, அவற்ருல் கிடைக்கும் விடையிலோ வரும் எண்கள் ஒரு முறைக்குமேல் வரக்கூடாது; ஆனுலும், 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்களும் வந்திருக்க வேண்டும்

(எ-டு) 483X12 = 5796. 157X28 = 4396.

முயன்ருல் முடியாதது இல்லை. முயலுங்கள்; நீங்களும் போடலாம்.




சென்ற மாதப் புதிரின் விடை:

கத்தரிக்காய் 60 உருபா; முட்டைக்கோசு 62 உருபா; உருளைக் கிழங்கு 61 உருபா; பூசணிக்காய் 15 உருபா.

இம்மாதப் புதிர்:

என் வீட்டுக்குப் புதிய தொலைபேசி ஒன்றமைக்கப்பட்டது. நண்பரொருவர் என் தொலைபேசியின் இலக்கம் என்னவென்று கேட்டார். நான் என் வீட்டுத் தொலைபேசி எண் நான்கு இலக்கங்களைக் கொண்டது நான்கு இலக்கங்களின் கூட்டுத்தொகை 24. முதலெண் மூன்றும் எண்ணைப்போல் மூன்றுமடங்கு. இரண்டாம் எண் நான்காம் எண்ணைவிட இரண்டு குறைவு. மூன்றும் எண்ணை இரண்டால் பெருக்கி ஒன்றைக் கூட்டினுல் நான்காம் எண் என்றேன். அவரோ விழிக்கிருர். நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்.

இப்புதிரை விடுத்த தம்பி: செல்வநம்பி. 19, முதலாவது நகரக் கட்டிடத் தெரு, அரக்கோணம்.

புதிர்-2.

கண்ணன் மாமா ஊரிலிருந்து வந்தார். வந்தவர் கண்ணனுக்கு ஒரு தூவலும் ஒரு கரிக்கோலும் வாங்கிவந்தார். கண்ணனுக்கோ மிக்க மகிழ்ச்சி. மாமாவிடம் ''இவ்விரண்டையும் என்னென்ன விலைக்கு வாங்கினீர்கள்?'' என்று கேட்டான். மாமா அவனது திறமையை ஆராயக் கருதினுர்.

''தம்பி, ஐந்து தூவல்களும் மூன்று கரிக்கோல்களும் சேர்ந்து உருபா: 8-50. நான்கு தூவல்களும் இரண்டு கரிக்கோல்களும் சேர்ந்து உருபா: 6-50. என்ருல் விலைகளை நீயே கண்டுபிடித்துக் கொள்'' என்ருர்.

எங்கே! நீங்கள் சொல்லுங்கள் பார்க்கலாம்.

இப்புதிரை எழுதிய தம்பி: மா. பூங்குன்றன். கடலூர்.

விடைகள் அடுத்த இதழில்.

# சமசுகிருதத்தில் தமிழ்ச்சொற்கள்-4

| தமிழ் | சமசு (வ. மொ) | தமிழ் | சமசு(வ.மொ ) |
|---|---|---|---|
| சக்கரம் | சக்ர | சலசல | ஜலஜ்ஜல |
| சகடி | சகட | சலி (தெள்ளு) | சல் |
| சங்கம்(சங்கு) | சங்க | சவ்வு | சவி |
| சச்சரி (ஒருவகைப்பறை) | ஜர்ஜரா(jh) | சவம் | சவ |
| சடை | ஜ்டா | சவளே | சபல |
| சண்டம் | சண்ட | சவை | சர்வ் |
| சண்டாளம் | சண்டால(c) | சலிப்பு | ஜ்ல்ப் |
| சண்டாளி | சண்டாலீ | சன்னம் | தனு |
| சண்ணம் | சிச்ன | சாணம் | சகண |
| சண்பகம் | சம்பக | சாணே | சாண, சான |
| சணல் | சண | சாத்து | ஸார்த்த |
| சதங்கை | ச்ருங்கலா | சாத்தன் | சாஸ்தா |
| சதரம் | சதுரச்ர | சாந்து | சந்தன |
| சடம் | ஜட | சாமை | ச்யாமா |
| சதுரம் | சதுர் | சாய்(படு) | சீ |
| சந்து | ஸந்தி | சாயுங்காலம் | சாயம் |
| சப்பட்டை | சப்பட்ட | சாயை | சாயா |
| சவை | சபா | சாலே | சாலா |
| சமம் | ஸம | சாவி | சப் |
| சமரம் (போர்) | ஸமர | சாறு | ஸார |
| சமர்த்து | ஸமர்த்த | சிச்சிலி (மீன்கொத்தி) | தித்திரி(வே) |
| சமயம் | ஸமய | சித்து | சித் |
| சருக்கம் | ஸர்க(g) | சித்தம் (மனம்) | சித்த |
| சருக்கரை | சர்க்கரா | சித்திரம் (ஓவியம்) | சித்ர |
| சரம் | சர | சிதம்பரம் | சிதம்பர |
| சல்லகம் | ஜல்லக | சிதை | சித் |
| சல்லரி | ஜல்லரீ | சிந்து | ஸிந்து |
| சலவை | ஷால | சிந்தூரம் (செந்தூள்) | ஸிந்தூர |
| சில்லி(சிள்வண்டு) | ஜில்லி(Jh) | சிவன் | சிவ |
| சிவை | சிவா | சூர்ப்பம் | சூர்ப்ப |

| தமிழ் | சமசு (வ.மொ.) | தமிழ் | சமசு (வ.மொ,) |
|---|---|---|---|
| சிவிகை | சிவிகா | சூலம் | சூல |
| சிற்பம்(மிகக்கொஞ்சம்) | ஸ்வல்ப | சூலி | சூலின் |
| சீகாழி | ஸ்ரீகாலி | சூலை | சூலா |
| சீர்த்தி | கீர்த்தி | செடி | ஜடி |
| சீரகம் | ஜீரகம் | செட்டி | ச்ரேஷ்டின் |
| சீரை | சீர | செம்பியன் | சைப்ய |
| சுக்கு | சுஷ்க | செவ்வந்தி | சேவதீ |
| சுட்கம் | சுஷ்க | செவியுறு | ச்ரு |
| சுண்டம் | சுண்டா(கள்) | சே(தங்குதல்) | க்ஷி |
| சுண்டி | சுண்டி | சேம்பு | கேமுக |
| சுண்டு | சுண்ட் | சேமம் | க்ஷேம |
| சுண்ணம் | சூர்ண | சேரலம் | கேரல |
| சுண்ணகம் | சூர்ணக | சேலை | சேல |
| சுண்ணகம் | சூர்ணக | சொம் (கூட்டம்) | ஸ்வ |
| சுதை | ஸுதா | சொம் (சொத்து) | ஸ்வாம் |
| சுரங்கம் | ஸுரங்கா | சொலவம் (சூத்திரம்) | ச்லோக |
| சுரப்பி | ஸௌரபி | சொலி(ஒளிர்) | ஜ்வல் |
| சுரம் | ஜ்வர | சொன்னம் | சுவர்ண |
| சுரிகை | சுரிகா(ch) | சோடை | சோஷ |
| சுருங்கை | ஸுருங்கா | சோம்பு | ஸ்வப் |
| சுல்லி | சுல்ல | தக்கோலம் | கக்கோல |
| சுவணம் | ஸுபர்ண | தக | தஹ் |
| சுவண்டை (சுவை) | ஸ்வத் | தாகம் | தாஹ |
| சுழிமுனை | ஸுஷும்ஞ | தாவம் | தாப |
| சுள் | க்ஷுல்ல | தக்கணம் | தக்ஷிண |
| சுறுக்கு | ஸ்ராக் | தட்டு | தட்(d) |
| சூடம் | சூட | தடம் | தட[t] |
| சூடிகை | சூடிகா | தடாகம் | தடாக |
| சூடை | சூடா | தண்டம் | தண்ட |
| சூர் | சூர் | தண்டனம் | தண்டன |
| சூரன் | சூர | தபு | தப் |
| சூரன் | ஸௌர | தமிழம் | த்ரமில |

[தொடரும்]

(பாவாணரின் வடமொழி வரலாறு)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1